பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

08 08 2024 **THURSDAY** 6 30 **PM**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. வக்ஃப் வாரிய சட்டத்திருத்த மசோதா யாருக்கும் எதிரானது அல்ல என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

2. சிறு குறு தொழில்துறையின் மூலம் 20 கோடி வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளதாக அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு. **Jitan Ram Manjhi** கூறியுள்ளார்.

3. போக்குவரத்துக் கழக தொழிலாளர்கள், மக்களின் நன்மதிப்பை பெறும் வகையில் பணியாற்ற வேண்டும் என்று மாநில அமைச்சர் திரு. பொன்முடி கேட்டுக் கொண்டுள்ளார்.

4. தமிழகத்தில் திமுக அரசு பொறுப்பேற்ற பின்னர், தேசிய நெடுஞ்சாலை திட்டங்களை செயல்படுத்துவதில் சுணக்கம் ஏற்பட்டுள்ளதாக பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

5. பாரிஸ் ஒலிம்பிக் மல்யுத்தப் போட்டியில் இந்தியாவின் **Aman Sehrawat** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

**>>>><<<<**

வக்ஃப் வாரிய சட்டத்திருத்த மசோதா இன்று மக்களவையில் தாக்கல் செய்யப்பட்டது.

மத்திய சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜூ, இதனை தாக்கல் செய்து பேசினார்.

சிறுபான்மையின மக்களின் உரிமைகளை உறுதி செய்வதற்கான அம்சங்கள் இந்த மசோதாவில் இடம்பெற்றிருப்பதாக அவர் தெரிவித்தார்.

இந்த மசோதாவிற்கு அறிமுக நிலையிலேயே காங்கிரஸ், திரிணாமுல் காங்கிரஸ், சமாஜ்வாதி, திமுக மற்றும் இடதுசாரிக் கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்தன.

இந்த சட்டத்திருத்த மசோதா அரசியல் சாசனத்திற்கு எதிரானது என்றும், மத உரிமைகளை பறிப்பதாக உள்ளது என்றும் அக்கட்சிகள் குற்றம் சாட்டின.

எதிர்க்கட்சிகளின் இந்த குற்றச்சாட்டை நிராகரித்த மத்திய அமைச்சர் திரு. ராஜீவ் ரஞ்சன் சிங், இந்த சட்டத்திருத்த மசோதா யாருக்கும் எதிரானதல்ல என்றார்.

வக்ஃப் வாரியம் என்பது மத வழிபாட்டிற்கானதல்ல என்றும், இதன் காரணமாக மத உரிமையை பறிப்பது என்ற பேச்சுக்கே இடமில்லை என்றும் அவர் தெளிவுபடுத்தினார்.

இந்த மசோதா குறித்து எதிர்க்கட்சிகள் மக்களின் கவனத்தை தவறான வகையில் திசை திருப்ப முயற்சிப்பதாகவும் திரு. ராஜீவ் ரஞ்சன் சிங் குற்றம் சாட்டினார்.

>>>><<<<

சிறு குறு தொழில்துறையின் மூலம் 20 கோடி வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளதாக அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு. **Jitan Ram Manjhi** கூறியுள்ளார்.

இன்று மக்களவையில் கேள்வி நேரத்தின் போது இதனை தெரிவித்த அவர், மகளிர் மற்றும் இளையோருக்கு கூடுதல் வேலைவாய்ப்புகளை உருவாக்க உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

>>>><<<<

நாடுமுழுவதும் கடந்த ஐந்தாண்டுகளில் 58 ஆயிரத்து 535 கிலோமீட்டர் தூரத்திற்கு தேசிய நெடுஞ்சாலைகள் அமைக்கப்பட்டுள்ளதாக மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு. நிதின் கட்கரி கூறியுள்ளார்.

மக்களவையில் கேள்வி நேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், தமிழகத்தில் மட்டும் 2 ஆயிரத்து 207 கிலோமீட்டர் தூரத்திற்கு நெடுஞ்சாலைகள் அமைக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

>>>><<<<

நாடுமுழுவதும் குழாய் மூலம் குடிநீர் இணைப்பு வழங்கும் திட்டத்தின் கீழ், 77 சதவீத ஊரக குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி வழங்கப்பட்டுள்ளதாக மத்திய நீர்வளத்துறை அமைச்சர் திரு. சி.ஆர். பாட்டேல் கூறியுள்ளார்.

இன்று மக்களவையில் இதனை தெரிவித்த அவர், 2019ஆம் ஆண்டு இந்த திட்டம் தொடங்கப்பட்டதாக கூறினார். இதன்கீழ் இதுவரை 15 கோடி வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படுவதன் மூலம், நோய்ப்பரவல் தடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

>>>><<<<

நீதிமன்ற நடவடிக்கைகளை கணினிமயமாக்குவதற்காக நடப்பு நிதியாண்டில் ஆயிரத்து 500 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக மத்திய சட்ட அமைச்சர் திரு. அர்ஜூன்ராம் மெஹ்வால் கூறியுள்ளார்.

இன்று மாநிலங்களவையில் கேள்வி நேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், இதில் 465 கோடி ரூபாய் ஏற்கனவே விடுவிக்கப்பட்டுள்ளது என்றார்.

>>>><<<<

அணுமின் உற்பத்தியில் சுயசார்பினை எட்ட வேண்டும் என்ற நோக்கில் மத்திய அரசு செயல்பட்டு வருவதாக பிரதமர் அலுவலக இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

இன்று மாநிலங்களவையில் கேள்வி நேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், அணுமின் உற்பத்தி தொடர்ந்து அதிகரிக்கப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

நாடுமுழுவதும் ஒன்பது அணுமின் உற்பத்தி நிலையங்கள் கட்டும் பணி நடைபெற்று வருவதாகவும் அமைச்சர் கூறினார்.

>>>><<<<

பழங்குடியின மொழிகளை பாதுகாப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக மத்திய இணையமைச்சர் திரு. துர்காதாஸ் உய்க்கே கூறியுள்ளார்.

மக்களவையில் கேள்வி நேரத்தின் போது இதனை தெரிவித்த அவர், பழங்குடியின மக்களின் பாரம்பரியத்தை பாதுகாப்பதற்கும், மேம்படுத்துவதற்கும் செயல்படுத்தப்பட்ட திட்டங்களை பட்டியலிட்டார்.

>>>><<<<

திமுக ஆட்சிக் காலத்தில் தான் பேருந்துகள் அரசுடைமையாக்கப்பட்டதாக மாநில அமைச்சர் திரு. பொன்முடி கூறியுள்ளார்.

இன்று விழுப்புரத்தில் 25 புதிய பேருந்துகளின் சேவையை மாநில அமைச்சர் திரு. செஞ்சி மஸ்தானுடன் இணைந்து தொடங்கிவைத்து அவர் பேசினார்.

அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு தற்போது புதிய பேருந்துகள் வாங்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

போக்குவரத்துக் கழக தொழிலாளர்கள், மக்களின் நன்மதிப்பை பெறும் வகையில் பணியாற்ற வேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

>>>><<<<

தமிழகத்தில் திமுக அரசு பொறுப்பேற்ற பின்னர், தேசிய நெடுஞ்சாலை திட்டங்களை செயல்படுத்துவதில் சுணக்கம் ஏற்பட்டுள்ளதாக பிஜேபி மாநிலத்தலைவர் திரு. அண்ணாமலை குற்றம் சாட்டியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், நெடுஞ்சாலைத் திட்டங்களுக்கு நிலம் கையகப்படுத்துதல், ஒப்புதல் பெறுதல் உள்ளிட்ட பணிகளில் திமுக அரசு கவனம் செலுத்தவில்லை என்று கூறியுள்ளார்.

>>>><<<<

தமிழகத்தில் போதைப்பொருள் புழக்கத்தை கட்டுப்படுத்த மாநில அரசு உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று பாமக தலைவர் திரு. அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், சென்னையை அடுத்த பழவந்தாங்கல் பள்ளியில் 12ஆம் வகுப்பு பயிலும் மாணவர் ஒருவர் வகுப்பு நேரத்தில் போதைப்பொருளை பயன்படுத்தியதை சுட்டிக்காட்டியுள்ளார்.

போதைப்பொருள் பழக்கத்திற்கு மாணவர்கள் அடிமையாகாமல் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு தமிழக அரசுக்கு உள்ளதாகவும் திரு. அன்புமணி ராமதாஸ் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

**>>>><<<<**

சாலைகளில் சுற்றித்திரியும் மனநலம் பாதிக்கப்பட்டவர்களை, காப்பகத்தில் சேர்க்க மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து தமிழக அரசு அறிக்கை தாக்கல் செய்யுமாறு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பான மனுவினை விசாரணை செய்த, பொறுப்பு தலைமை நீதிபதி திரு. கிருஷ்ணகுமார், நீதிபதி திரு. பாலாஜி அமர்வு இன்று இதற்கான உத்தரவை பிறப்பித்தது.

இவ்வழக்கின் விசாரணை இரண்டு வாரங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

**>>>><<<<**

கோவை வெள்ளலூர் குளக்கரையில் பட்டாம்பூச்சி பூங்கா இன்று பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறக்கப்பட்டது.

இந்த பூங்காவில் 18 அடி உயர பட்டாம்பூச்சி வடிவிலான முகப்பு அமைக்கப்பட்டு, பட்டாம்பூச்சிகள் குறித்த குறிப்புகள் வைக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**>>>><<<<**

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த 3 தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் இதனை தெரிவித்த அவர், சில இடங்களில் கனமழை பெய்யக்கூடும் என்றார்.

மாவட்டச் செய்திகள்

ஒகேனக்கல் காவிரியாற்றில் 24 நாட்களுக்குப் பிறகு பரிசல் இயக்க மாவட்ட நிர்வாகம் அனுமதி அளித்துள்ளது.

**>>>><<<<**

தூத்துக்குடி மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் 525 ஏக்கர் பரப்பளவில் மரங்கள் நடும் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளதாக மேயர் திரு. ஜெகன் கூறியுள்ளார்.

**>>>><<<<**

நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோட்டில் தாய்ப்பால் வாரவிழா குறித்த விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.

**>>>><<<<**

திருப்பத்தூர் மாவட்டம், எலவம்பட்டி கிராமத்தில் வருமுன் காப்போம் திட்டத்தின் கீழ், சிறப்பு மருத்துவ முகாமினை ஆட்சியர் திரு. தர்பகராஜ் இன்று தொடங்கி வைத்தார்.

**>>>><<<<**

கன்னியாகுமரி மாவட்டத்தில் இலங்கைத் தமிழர் முகாம்களில் நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்டப் பணிகளை ஆட்சியர் திருமதி. அழகு மீனா இன்று ஆய்வு செய்தார்.

**>>>><<<<**

விளையாட்டுச் செய்திகள்

பாரிஸ் ஒலிம்பிக் மல்யுத்தப் போட்டியில் இந்தியாவின் **Aman Sehrawat** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற ஆடவர் 57 கிலோ எடைப்பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர் 11-0 என்ற புள்ளிக்கணக்கில் ரஷ்யாவின் Zelimkhan Abakarov-ஐ வென்றார்.

ஹாக்கி போட்டியின் வெண்கலப் பதக்கத்திற்கான ஆட்டத்தில் இந்தியா தற்போது ஸ்பெயினை எதிர்த்து ஆடிவருகிறது. சற்றுமுன்வரை இந்தியா 2-1 என்ற கோல்கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது.

----------

இத்தாலியில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ராம்குமார் ராமநாதன் - **Arjun Kadhe** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

**>>>><<<<**

**Bonn** ஓப்பன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஜீவன் நெடுஞ்செழியன் - விஜய் சுந்தர் பிரசாந்த் இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

**>>>>END<<<<**